# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 200/ந/2017

ஆணை எண். 70/2018

நாள் : 26/03/2018

**திரு C. இராமன் (எ) தென்னரசு,**
**அய்யன் கோவில்பட்டி,** – **முறையீட்டு மனுதாரர்**
**உசிலம்பட்டி வட்டம்,**
**மதுரை மாவட்டம்.**

**நகராட்சி ஆணையாளர்,**
**உசிலம் பட்டி நகராட்சி,**
**உசிலம்பட்டி.** – **எதிர் மனுதாரர்**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பூதிப்புரம் அஞ்சல், அய்யன் கோவில் பட்டி முகவரியில் வசிக்கும் திரு C. இராமன் (எ) தென்னரசு அவர்களின் 06.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 11.10.2017 அன்று பெறப்பட்டு, 200/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு மற்றும் விசாரணையின்போது அவர் அளித்த வாக்குமூலம் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பூதிப்புரம் அஞ்சல், அய்யன் கோவில் பட்டி முகவரியில் வசிக்கும் திரு C. இராமன் (எ) தென்னரசு என்பவர், கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி முறையீடு செய்துள்ளார் :-

(1) நகராட்சிப் பகுதிகளில் கட்டட அனுமதி வழங்க கையூட்டு கோருவது ;

(2) ரூபாய் 25 இலட்சம் பெற்றுக்கொண்டு வரி விதிப்பாளர் மற்றும் எழுத்தர்களுக்கு பணிநியமனம் வழங்கியது ;

(3) பேருந்து நிலையக் கடைக்காரர்களிடம் மிரட்டி பணம் வாங்குவது ;

(4) கடைகளை ஏலம் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியது ;

(5) உள்ளூர் ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப் பணி வழங்காதது ;

(6) நகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கடைகளைக் கட்டி வாடகைக்கு விட்டது ;

(7) துப்புரவுப் பணியாளர்களின் வீட்டுவாடகையை வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்தத் தவறியது ;

(8) கையூட்டு தர மறுக்கும் வரைபட பொறியாளர்களுக்கு உரிமம் வழங்க மறுப்பது.

மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து நகராட்சி ஆணையர் விரிவான விளக்கத்தினை அளித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் தன்மீது உரிய ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுகளைக் கூறாமல் பொத்தாம் பொதுவாக வீடுகளில் வரி விதிப்பு செய்ய பணம் கேட்டதாக காழ்ப்புணர்ச்சி காரணமாக பொய்ப்புகார் தெரிவித்துள்ளார் என நகராட்சி ஆணையர் குறிப்பிட்டுள்ளார். இதுபோன்ற நேர்வுகளில் மனுதாரர் ஒரு இடைத்தரகராக செயல்பட விருப்பம் தெரிவித்ததாகவும் அதற்கு தான் உடன்படாததால் இதுபோன்று பொய்புகார்களை தெரிவித்துள்ளார் என்று நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். கட்டட அனுமதி கோரும் நேர்வுகளிலும் முறையீட்டு மனுதாரரை ஒரு இடைத்தரகராக செயல்பட அனுமதித்தால் தனக்கு பணம் கிடைக்கும் என்று தன்னை நேரில் சந்தித்துக் கூறியதாகவும் ஆணையர் குறிப்பிட்டுள்ளார்.

பணம் சம்பந்தப்பட்ட நேர்வுகளிலும் தான் யாரிடமும் பணம் பெறவில்லை என்றும் அபாண்டமாக மனுதாரர் தன்மீது பழிசுமத்தியுள்ளார் என்றும் ஆணையர் குறிப்பிட்டுள்ளார். நகராட்சிப் பெயரைப் பயன்படுத்தி அப்பாவி மக்களிடம் மனுதாரர் அடாவடியாக சம்பாதிப்பதை தடுத்து நிறுத்தியதே மனுதாரருக்கு தன் மீது கோபம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடை வாடகை சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு, 9 ஆண்டுகள் குத்தகை காலம் முடிந்த கடைகளுக்கு 246 சதவிகிதம் வாடகையை உயர்த்தி நகராட்சிக்கு வருவாய் ஈட்டித் தந்துள்ளதாகவும் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் பேருந்து நிலையத்தில் 65 எண்ணுள்ள கடையினை ரூ.7,050/–க்கு பொது ஏலத்தில் எடுத்தும், இன்றுவரை கடை நடத்தவும் தரைவாடகையினை செலுத்தவுமில்லை எனத் தெரிவித்து முறையீட்டு மனுதாரரின் செயல்பாட்டினைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

நகராட்சி இடத்தை ஆக்கிரமித்து கடை கட்டி வாடகைக்கு விட்டதாக ஆணையர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டிற்கு விளக்கம் அளித்துள்ளார். தேனி சாலை, முருகன் கோவில் மதில்புறத்தை ஒட்டி ஆக்கிரமிப்பு செய்த 4 தரை கடைகளை நகர்மன்றம் செயல்பட்டு வந்த காலத்தில் பொது ஏலத்திற்கு விடப்பட்டு, உரிமதாரர்களிடம் மாத வாடகையாக ரூ.750/– வசூலிக்கப்பட்டு வருகிறது என்றும் ஆணையர் குறிப்பிட்டுள்ளார். மேலும், உசிலம்பட்டி நகராட்சியில் தான் பணியேற்றபின்பு இரண்டு கட்டட வரைவாளர்களுக்கு மட்டுமே உரிமம் வழங்கப்பட்டதென்றும், அவர்களிடம் கையூட்டு எதுவும் பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். துப்புரவுப் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட வாடகை முறையாக வீட்டுவசதி வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கண்டிப்புடன் செயல்பட்டு வரும் தன்னை உசிலம் பட்டி நகராட்சியிடமிருந்து பணியிட மாறுதல் செய்யவேண்டுமென்பதே முறையீட்டு மனுதாரர் போன்ற சில இடைத்தரகர்களின் குறிக்கோள்கள் என்றும், உசிலம்பட்டியில் ஒருசிலர் அரசியல் கட்சி என்ற பெயரில் அரசு அலுவலர்களை மிரட்டி தங்களின் சுயலாபங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றனர் எனவும் ஆணையர் குறிப்பிட்டுள்ளார். முறையீட்டு மனுதாரரின் செயல்பாடுகள் குறித்து உளவுத் துறை மூலம் விசாரணை மேற்கொண்டால் தான் தெரிவித்த தகவல்கள் அனைத்தும் உண்மை எனத் தெரியவரும் என்று உறுதியுடன் கூறியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரிடம் 14.03.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது ஆணையர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை. எனினும், விசாரணை நடைபெற்ற நாளிலிருந்து பத்து நாட்களில் ஆணையர் யார் யாரிடம் பணம் வாங்கினார் என்று பெயர்களைக் குறிப்பிட்டோ அல்லது சம்பந்தப்பட்ட நபர்களை நேரில் அழைத்து வருவதாகவோ விசாரணையின்போது மனுதாரர் குறிப்பிட்டார் எனினும், இதுநாள் வரையிலும் எந்த விவரங்களும் மனுதாரர் விசாரணையின்போது உறுதி அளித்தது போன்று பெறப்படவில்லை. மேலும், விசாரணையின்போது திருமதி பிரபாராணி என்பவரின் வீட்டிற்கான குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டது குறித்து தெரிவிக்கப்பட்டது. அதற்குக் காரணம் கையூட்டு வழங்க மறுத்ததுதான் என்ற குற்றச்சாட்டினை மனுதாரர் குறிப்பிட்டார். எனினும், சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து இது குறித்து எந்தவிதப் புகாரும் வரப்பெறவில்லை.

முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு ஆணையர் சமர்ப்பித்த அறிக்கையினை கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. நகராட்சியின் சேவையை எதிர்நோக்கி வரும் பொதுமக்களும் அலுவலர்களுக்குமிடையே இடைத்தரகராக செயல்பட அனுமதிக்காததே தன் மீது குற்றச்சாட்டுகளைத் தெரிவித்ததற்கான காரணம் என நகராட்சி ஆணையர் தெரிவித்ததை கவனத்தில் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. எந்தவிதமான ஆதாரங்களின்றி குற்றச்சாட்டுகளைத் தெரிவிப்பதினால் எந்தவிதப் பலன்களும் ஏற்படப் போவதில்லை. இதானல், இம்முறைமன்ற நடுவத்தின் பொன்னான காலநேரம் மற்றும் அலுவலர்களின் உழைப்புதான் வீணடிக்கப்படுகின்றன. எந்தவொரு நபரும் பிறர்மீது குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கும் முன் தானும் அப்பழுக்கற்றவராக உள்ளதை உறுதி செய்து கொள்ளவேண்டும். இந்நேர்வு சம்பந்தப்பட்ட முறையீட்டு மனுதாரர் பேருந்து நிலையத்தில் கடை ஒன்றினை ஏலத்தில் எடுத்து அக்கடையை நடத்தாமலும், வாடகைத் தொகையினை செலுத்தாமல் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தி வருவதையும் இம்முறைமன்ற நடுவம் பதிவு செய்துள்ளது. மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு போதிய ஆதார ஆவணங்கள் ஏதும் விசாரணையின்போது அல்லது மனுதாரரால் உறுதியளிக்கப்பட்டதுபோல் அவர் கோரிய கால அவகாசத்திற்குள் சமர்ப்பிக்காத நிலையில், மனுதாரரின் முறையீட்டினை தள்ளுபடி செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், நகராட்சிக் கடையை ஏலத்தில் எடுத்து மனுதாரர் வாடகை செலுத்தாமல் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியது குறித்து உரிய நடவடிக்கை எடுத்திட நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**2018**– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், **26**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பழனிவேல்

உதவிபதிவாளர்.

26.3.18

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   உசிலம்பட்டி நகராட்சி,
   **உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.**

2. **திரு C. இராமன் (எ) தென்னரசு,**
   **C. அய்யன்கோவில்பட்டி,**
   **பூதிப்புரம் அஞ்சல், உசிலம்பட்டி வட்டம்,**
   **மதுரை மாவட்டம்.**

3. **மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,**
   **மதுரை மண்டலம்,**
   **மதுரை.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பிரிவு அலுவலர்(நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரிகள்**